**E.A.1/2025 in EP.No.14/2025** **நாள் 24.03.2026**

ம.சா.1 ஆனவரை அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் பெறப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எந்த வயதிலிருந்து வெளியுலகம் தெரியும் என்றால் ஆறு வயதிலிருந்து தெரியும். எனது மனுவில் சொல்லியுள்ள சொத்து விவரங்கள் குறித்து எப்போதிலிருந்து தெரியும் என்றால் எனது தாயார் இறந்தபின்பு இருந்து தெரியும். அதற்கு முன்பு தெரியாதா என்றால் அதற்கு முன்பும் தெரியும். ம.சா.ஆ.7 ல் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து அது ஆங்கிலத்தில் உள்ளதால் தெரியாது என்கிறார். நான் மாண்பமை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் சொத்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மாண்பமை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.348/2025 என்றால் சரிதான். எனக்கு தமிழ் நன்றாக எழுத படிக்க தெரியும் என்றால் ஆமாம். அ.வ.எண்.348/2025 வழக்கில் உள்ள அயிட்டம் நம்பர் 1, 2 ல் உள்ள சொத்து விபரத்தை எந்த ஆவணத்தை பார்த்து சொல்லியுள்ளேன் என்றால் பட்டா சிட்டாவை பார்த்து சொல்லியுள்ளேன். 1வது அயிட்ட சொத்தின் சர்வே எண், நான்கு எல்லை சொல்லமுடியுமா என்றால் சர்வே எண்.539 ஆகும். நான்கு எல்லை தெற்கு ரோடு, வடக்கு முத்துசாமி கவுண்டர் பூமி, கிழக்கு மலையப்ப கவுண்டர் வகையறா பூமி, மேற்கு ராஜதுரை பூமி ஆகும். தற்போதைய நிலையில் இவ்வாறு தான் நான்கு எல்லைகள் உள்ளது என்றால் ஆமாம்.

2) இந்த நான்கு எல்லைகளை பட்டாவை பார்த்து தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். இந்த சொத்திற்கு பட்டாவை தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்றால் எனது மாமாவை கேட்டால் தான் தெரியும். எனது மாமா பெயர் கந்தசாமி கவுண்டர் ஆகும். அவரை கேட்டு சொல்லமுடியுமா என்றால் அவர் சொல்லமாட்டார். 2வது அயிட்ட சொத்தின் நான்கு எல்லை சொத்து விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

3) அந்த நான்கு எல்லையும், பட்டாவை வைத்து தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எனதுமூதாதையர் பெயர் எத்தனை தலைமுறைக்கு தெரியும் என்றால் பாட்டன் பூட்டன் வரை தெரியும். கந்தசாமி என்பவர் யார் என்றால் எனது தாய்மாமா ஆகும். கந்தசாமியின் தந்தை பெயர் முத்துசாமி கவுண்டர் ஆகும். முத்துசாமி கவுண்டரின் தந்தை பெயர் முத்துசாமி கவுண்டர் ஆகும். எனது தாத்தா முத்துசாமி கவுண்டரின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மாமாவிடம் உள்ளது. ராசப்ப கவுண்டர் மகன் ராசப்ப கவுண்டரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ராசப்ப கவுண்டர் மகன் ராமசாமி கவுண்டரை தெரியுமா என்றால் அவர் சர்வே எண்.540ன் வடபுறத்தின் பங்குதாரர் ஆவார். கடந்த 04.02.1975ம் தேதி ஆவண எண்.159/1975 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள பாகக்கரார் ஆவணத்தில் உள்ள முத்தப்ப கவுண்டர் மகன் முத்துசாமி எனது தாத்தா முத்துசாமி கவுண்டர் மகன் கந்தசாமி எனது தாய்மாமா என்றால் ஆமாம்.

4) நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.348/2025ல் 2வது அயிட்ட சொத்து ஆவண எண்.159/1975ல் பி செடியூலாக எனது தாத்தாவுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி ஆவண எண்.159/1975ன் கணினி நகல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சென்னியப்ப கவுண்டர் மகன் மலையப்ப கவுண்டர் என்பவர் சர்வே எண்.539க்கு கிழபுறம் உள்ளவர் ஆவார். மேற்படி மலையப்ப கவுண்டர் மகன் பெயர் ராமசாமி கவுண்டர் என்றால் ஆமாம். முத்தப்ப கவுண்டர் மகன் முத்துசாமி எனது தாத்தா என்றாலும், முத்துசாமி கவுண்டர் மகன் கந்தசாமி கவுண்டர் எனது தாய்மாமா என்றால் ஆமாம். 04.02.1975ல் ஆவண எண்.160/1975 சின்னதாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பாகக்கரார் ஆவணம் செய்துகொண்டதற்கான ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம்.

5) மேற்படி 04.02.1975 தேதியிட்ட பாகக்கரார் ஆவணத்தின் கணினி நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தின் ஏ செடியூலின் முத்துசாமி கவுண்டருக்கும், கந்தசாமி கவுண்டருக்கும் சர்வே எண்.539 ல் 3 ஏக்கர் 91 செண்ட் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி சொத்து தான் மனுச் சொத்தின் முதல் அயிட்ட சொத்து என்றால் ஆமாம். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 வது பத்தியில் முதல் வரியில் முத்துசாமி கவுண்டர் 1970 ல் இறந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மனுச் சொத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இம்மனுவுடன் வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன்.

6) எனக்கு வில்லங்க சான்று என்னவென்று தெரியும் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.348/2025 மற்றம் இந்த கோருரிமை மனுவில் சம்பந்தப்பட்ட 15.05.1974 முதல் 31.12.1986 வரையிலான வில்லங்க சான்று தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம். மேற்படி வில்லங்க சான்றின் கணினி நகல் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதற்காக இம்மனுவை தாக்க்ல செய்துள்ளேன் என்றால் என்னுடைய 2/4 பங்கையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அதனால் நான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன். மனுச் சொத்து நீதிமன்ற ஏலத்திற்கு வருகிறது என்று எனக்கு தகவல் சொன்னார்கள் அதன் பின்னர் நான் இம்மனுவை தாக்கல் செய்தேன். அதன் பின்னர் தான் பாகப்பிரிவினை கோரி வழக்கும் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். அந்த வழக்கில் எனது மாமாவும் மாமா மகனும் கட்சி செய்யவில்லை என்றாலும், அவர்கள் ஒருதலைப்பட்சமாக உள்ளார்கள் என்றாலும் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் சட்டப்படி பெற்ற தீர்ப்பிணை நிறைவேற்றவிடாமல் தடுக்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) எனக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் எந்தவித ரத்த சம்மந்தமும் இல்லை என்றால் எனது தாய்மாமா கந்தசாமியின் ஒரே வாரிசு தான் பெரியசாமி ஆவார். பெரியசாமிக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் பிரச்சனை உள்ளது. பங்கு கேட்டு அவர் கொடுக்கவில்லை. முத்துசாமியின் ஒரே மகன் கந்தசாமி, கந்தசாமியின் ஒரே மகன் தான் இவ்வழக்கின் 2ம் எதிர்மனுதாரர் என்றால் சரியல்ல. முத்துசாமிக்கு எனது தாயார் பாப்பாத்தியும் மகள் ஆவார். முத்துசாமி கவுண்டருக்கு பாப்பாத்தி என்ற மகளே இல்லை என்றால் சரியல்ல. பாப்பாத்தி என்பவர் முத்துசாமி கவுண்டரின் மகள் அல்ல என்பதால் நான் மனுச் சொத்தில் பங்குரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. முத்துசாமி கவுண்டருக்கு பாப்பாத்தி மகள் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அதை தாக்கல் செய்துள்ளேன். எனது தாயாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேன்.

8) நான் தாக்கல் செய்துள்ள ஆவணம் எனது தாயாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றேயொழிய, மனு சொத்து சம்பந்தப்பட்ட முத்தப்ப கவுண்டரின் மகன் முத்துசாமி கவுண்டரின் மகள் தான் பாப்பாத்தி என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முத்தப்ப கவுண்டரின் மகன் முத்துசாமி கவுண்டரின் இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனது மாமாவை கேட்டால் தான் தெரியும். எனக்கு மேற்படி முத்துசாமி கவுண்டரின் இறப்பு விவரம் தெரியாது என்றால் தெரியும். 1ம் எதிர்மனுதாரர் சட்டப்படியான தொகையை வசூல் செய்வதற்காக தடை ஏற்படுத்துவற்கு இம்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரர் கடன் தொகையை வசூலிப்பதற்கு தொடர்ச்சியாக தடை ஏற்படுத்தி வந்தார் என்றாலும், தற்போது நான் அதில் தடை ஏற்படுத்துவதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9) எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளையும் 1ம் எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார் என்றால் சரியல்ல. எனக்கு மனுச் சொத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லாத நிலையில் எனக்கு மனுச் சொத்தில் பங்கு உள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி
என்று ஒப்புக் கொண்டு என்
முன் கையெழுத்து செய்தார்.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA DN: cn=K L PRIYANGA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

கூடுதல் சார்பு நீதிபதி,
கரூர்.